بسم الله الرحمن الرحیم　　　نحمده و نصلی علیٰ رسوله الکریم　　　وعلیٰ عبده المسیح الموعودؑ

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சஹாபாக்களான ஹஸ்ரத் ஹல்லாது பின் அம்ர் பின் ஜமூஹ் அன்ஸாரி (ரலி) மற்றும் ஹஸ்ரத் உக்பா பின் ஆமர் (ரலி) ஆகியோரைப் பற்றிய ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய நற்குறிப்பு**

**மதிப்பிற்குரிய மர்ஹூம் அஹ்மது ஷஹீது சாஹிப் அவர்களின் மனைவியான அமெரிக்காவைச் சேர்ந்த பழைய அஹ்மதி ஸிஸ்டர் ஆலியா ஷஹீது சாஹிபா அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 11 ஜனவரி 2019 அன்று ஆற்றிய ஜூமுஆ பேருரையின் சுருக்கம்**

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

***ஹஸ்ரத் ஹல்லாது பின் அம்ர் பின் ஜமூஹ்***. இவர் அன்ஸாரி சஹாபியாக இருந்தார்கள். இவர் பத்ர் சஹாபாக்களைச் சார்ந்தவர். இவரது தந்தையார் அம்ர் பின் ஜமூஹ் மற்றும் சகோதரர்கள் ஹஸ்ரத் மஆஸ், ஹஸ்ரத் அபு எமன், ஹஸ்ரத் மவூஸ் ஆகியோருடன் பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபி ஆவார்கள். பத்ர் போருக்காகப் சென்றபோது ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் தமது படையுடன் மதீனாவுக்கு வெளியே சுக்யா என்ற இடத்தில் தங்கினார்கள்.

ஹஸ்ரத் ஹல்லாத் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதன் ஹுஸைகா என்ற பெயரை மாற்றி சுக்யா என்று வைத்தார்கள். நான் சுக்யா என்ற அவ்விடத்தை வாங்கி விட வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் எனக்கு முன்பே ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்கள் இரண்டு ஒட்டகத்தை விலையாகக் கொடுத்து அவ்விடத்தை வாங்கி விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறப்பட்டபோது அன்னார், இது மிகவும் இலாபகரமான வியாபாரம் ஆகும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஹல்லாத், அவரது தந்தையார் அம்ர் பின் ஜமூஹ், ஹஸ்ரத் அபூ எமன் ஆகிய மூவரும் உஹது போரில் கலந்து கொண்டனர். மூவரும் ஷஹாதத்தைப் பெற்றார்கள்.

அறிவிப்பில் ஹல்லாதின் தந்தையார் அம்ர் பின் ஜமூஹ் பற்றி வருகிறது. பத்ர் போர் சந்தர்ப்பதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜிஹாதிற்காக கூறியபோது இவரது காலில் இருந்த பலவீனத்தினால் இவர் போரில் கலந்து கொள்வதிலிருந்து இவரது மகன்கள் இவரைத் தடுத்து விட்டனர். ஆனால் உஹது போரின்போது அம்ர் தமது மகன்களிடம் கூறினார். நீங்கள் என்னை பத்ரிலும் கலந்து கொள்ள விடவில்லை. இப்போது என்னை தடுக்க முடியாது. நான் உஹதில் கலந்து கொள்வேன் என்றார்.

அவரே நேரடியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று, என் மகன்கள் என்னை பத்ர் போரில் கலந்து கொள்வதிலிருந்து தடுத்து நிறுத்தி விட்டனர். இப்போது நான் இந்தப் போரில் உங்களுடன் கலந்து கொள்ள விரும்புகிறேன். இறைவன் மீது ஆணையாக! நான் உறுதியாக நம்புகிறேன். அல்லாஹ் எனது உள்ளத்து ஆசையை நிறைவேற்றுவான். எனக்கு ஷஹாதத்தை வழங்குவான். இதே நொண்டிக் கால்களுடன் நான் சொர்க்கத்தில் நுழைவேன் என்றார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக அல்லாஹ் உங்களுடைய ஊனத்தை ஏற்றுக் கொள்வான். எனவே உங்கள் மீது கடமையில்லை என்று கூறி விட்டு அவரது மகன்களிடம், நீங்கள் இவரை இவரது நற்செயலிலிருந்து தடுக்காதீர்கள். இவரது உள்ளத்தின் விருப்பம் அவ்வாறு இருக்கும் என்றால் அதனை நிறைவேற்ற விடுங்கள். அல்லாஹ் அவருக்கு ஷஹாதத் வழங்கட்டும்.

ஹஸ்ரத் அம்ர் தமது ஆயுதத்தை எடுத்துக் கொண்டு துஆ செய்தவாறு உஹது மைதானத்தை நோக்கிச் சென்றார். அல்லாஹும்ம அர்ஸுக்னி ஷஹாததன் வலா தருத்தனி இலா அஹ்லி ஹாயிபா. அதாவது அல்லாஹ்வே! எனக்கு ஷஹாதத்தை வழங்குவாயாக. என்னை எனது வீட்டிற்கு தோல்வியடைந்தவனாக திரும்பி விடாதே என்று துஆ செய்தார்கள். அல்லாஹ் அவரது துஆவை ஏற்றுக் கொண்டான். அவர் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார்.

ஹஸ்ரத் ஹல்லாது உடைய தாயார் ஹஸ்ரத் ஹின்த் பின்த் அம்ர், ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் உடைய மாமி ஆவார்கள். உஹது போரில் ஹஸ்ரத் ஹிந்த் அவர்கள் தமது கணவர், தமது மகன், தமது சகோதரன் ஆகியோர் மரணமடையக் கண்ட பிறகு அவர்களின் சடலங்களை ஒட்டகத்தில் ஏற்றி உஹதுக்கு கொண்டு செல்லுமாறு கட்டளையிடப்பட்டது. உஹதிலேயே அடக்கம் செய்யப்பட்டது. முதலில் மூவரும் ஷஹீதாகி இருக்கும்போது மதீனாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இதன் விபரம் மேலே வருகிறது. இறைவனது விருப்பம் உஹதின் ஷஹீதுகள் உஹதிலேயே அடக்கம் செய்யப்பட வேண்டும் என்றிருந்தது.

இதன் விவரம் இவ்வாறு கிடைக்கிறது: ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் உஹது போரின் நிலைமைகளைத் தெரிந்து கொள்வதற்காக மதீனாவின் பெண்களுடன் வீட்டிலிருந்து வெளியேறினார்கள். ஹர்ரா என்ற இடத்தை அடைந்தபோது ஹிந்த் பின்த் அம்ர் அவர்களை சந்தித்தார்கள். அவர் தமது ஒட்டகத்தை ஒட்டினார். அந்த ஒட்டகத்தில் அவர்களது கணவர் ஹஸ்ரத் அம்ர் பின் ஜமூஹ், ஹஸ்ரத் ஹல்லாது பின் அம்ர், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் ஆகியோரது சடலங்கள் இருந்தன. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், நீங்கள் உங்களுக்குப் பின்னால் மக்களை எந்நிலையில் விட்டு விட்டு வருகிறீர்கள் என்று ஏதாவது செய்தி உண்டா? என்று கேட்டார்கள். அதற்கு ஹிந்த் அவர்கள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நன்றாக இருக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பின் எந்த துன்பமும் எளிதானதுதான்.

ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள், இந்த ஒட்டகத்தில் இருப்பவர்கள் யார் யார்? என்று கேட்டார்கள். அதற்கு ஹிந்த், எனது சகோதரர் மற்றும் எனது மகன் ஹல்லாது மற்றும் எனது கணவர் அம்ர் பின் ஜமூஹ் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள், இவர்களின் சடலங்களை எங்கே எடுத்துச் செல்கிறீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், மதீனாவில் அடக்குவதற்கு எடுத்து செல்கிறேன் என்று கூறி விட்டு ஒட்டகத்தை ஒட்டினார்கள். ஆனால் ஒட்டகம் உட்கார்ந்து விட்டது. அவர் ஒட்டகத்தை கண்டித்தார். அது எழுந்ததும் அதனை மதீனா நோக்கித் திருப்பினார். அது மீண்டும் உட்கார்ந்து விட்டது. பிறகு உஹதினை நோக்கி திருப்பியதும் விரைவாக ஓடியது. பிறகு ஹிந்த் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் இந்த சம்பவம் குறித்து தெரிவித்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த ஒட்டகம் கட்டளையிடப்பட்டுள்ளது என்று கூறினார்கள்.

பிறகு அன்னார் கூறினார்கள்: ஹிந்தே! அமர் பின் ஜமூஹ், உனது மகன் ஹல்லாது மற்றும் சகோதரர் அப்துல்லாஹ் ஆகியோர் சொர்க்கத்தில் ஒருவருக்கொருவர் நண்பர்களாக இருக்கிறார்கள். உடனே ஹிந்து அவர்கள், அல்லாஹ்வின் தூதரே! எனக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் என்னையும் அவர்களின் நட்பில் இணைக்கட்டும் என்றார்கள்.

அடுத்த சஹாபி ***ஹஸ்ரத் உக்பா பின் ஆமிர்*** பற்றி கூறப்படும். இவரது தாயார் பெயர் ஃபகீஹா பின்த் சகன் ஆவார்கள். தந்தை ஆமிர் பின் நாபீ ஆகும். ஹஸ்ரத் உக்பா பின் ஆமிர் மக்காவில் வந்து ஈமான் கொண்ட 6 பேர்களுள் ஒருவர் ஆவார். அந்த 6 நபர்களின் பெயர் இதுவாகும். 1) அபூ இமாமா பின் ஸராராஹ். இவர் நஜ்ஜாரைச் சார்ந்தவர். 2)அவ்ஃப் பின் ஹாரிஸ். 3) ராஃபி பின் மாலிக். இவர் பனூ ஸுரைக்கைச் சார்ந்தவர். அதுவரை திருக்குர்ஆனில் இறங்கிய வசனங்களை அன்னார் அவருக்கு வழங்கினார்கள். 4) குத்பா பின் ஆமிர். இவர் பனூ சலமாவைச் சார்ந்தவர். 5) உக்பா பின் ஆமிர். பனூ ஹராமைச் சார்ந்தவர். உக்பா பின் ஆமிர் பத்ர் சஹாபி ஆவார்என்று இவரைப் பற்றியே கூறப்படுகிறது. 6) ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரியாப். இவர் பனூ உபைதைச் சார்ந்தவர்.

இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டுப் பிரிந்து செல்லும்போது கூறினர். எங்களை கோத்திரச் சண்டை மிகவும் பலவீனப்படுத்தி விட்டது. எங்களுக்குள் அநேக கருத்து வேறுபாடுகள் உள்ளன. யஸ்ரப் சென்று எங்கள் நண்பர்களிடம் தப்லீக் செய்வோம். உங்கள் மூலமாக அல்லாஹ் எங்களை மீண்டும் ஒன்று சேர்க்கட்டுமாக. பிறகு நாங்கள் எல்லா வகையிலும் உங்களுக்கு உதவி செய்யத் தயாராக உள்ளோம். இதனைக் கூறி விட்டு இவர்கள் சென்று விட்டனர். யஸ்ரபில் இஸ்லாம் பற்றிய சர்ச்சைகள் நடந்தன. அவ்வருடம் யஸ்ரிப்வாசிகளிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காரணிகளைப் பொருத்தவற்றில் நம்பிக்கையிலும் நம்பிக்கையின்மையான நிலையிலும் கழித்தார்கள். அன்னார் அந்த 6 உண்மைப் படுத்தியவர்களின் நிலைமைகள் எவ்வாறிருந்தன என்று கவலை கொண்டார்கள். யஸ்ரிபில் வெற்றிக்கான ஏதாவது வழி ஏற்படுகிறதா? இல்லையா? என்று நினைத்தார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அன்றைய நாட்களில் மக்காவாசிகளின் அநீதி நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே இருந்தது. அவர்கள், இஸ்லாத்தை அழிக்க இதுதான் நேரம் என்று நன்றாக புரிந்து கொண்டிருந்தனர். இதனை விட நெருக்கடியான நேரம் இஸ்லாத்திற்கு வரவே இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் அவர்களின் பரிசுத்த சஹாபிகள் பாறையைப் போன்று ஓரிடத்தில் ஒன்றாக நிலைத்து நின்றனர். அவர்களின் உறுதிப்பாடு, திடம் எதிரிகளைக் கூட வியப்பில் ஆழ்த்தியது. இம்மனிதர் எத்தகைய உள்ளத்தின் வலிமை உடையவராக இருக்கிறார்? எதுவும் அவரை தன் நிலையிலிருந்து அசைக்க முடியவில்லையே? என்று அவர்கள் வியப்படைந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பேச்சில் ஒரு திகிலும் கம்பீரமும் இருந்தது. துன்பங்களின் புயலுக்கு மத்தியில் அது உயர்ந்து நின்றது. ஒருபுறம் இக்காட்சிகள் மக்கத்து குறைஷிகளை ஆச்சர்யப்படுத்தியது. மறுபுறம் அவர்களின் உள்ளத்தில் ஓர் ஆவலும் எழுந்தது.

இந்த நாள்களைப் பற்றி சர் வில்லியம் மூர் கூட எழுதியுள்ளார். அந்த நாள்களில் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தமது சமுதாயத்தின் முன் நெஞ்சத்தை நிமிர்த்தி இருந்தார்கள் என்றால் அவர்களால் அசையக் கூட முடியாது. அந்நிலையில் வெற்றியைக் குறித்து திட உறுதியால் நிறைந்திருந்தார்கள். உதவி ஒத்தாசையற்ற மனிதர் மற்றும் அவரது சிறிய கூட்டம் அதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) மற்றும் அவர்களது சில சஹாபா ஆகியோரின் நிலை ஒரு சிங்கத்தின் வாயில் மாட்டியவரின் நிலையாகும். இந்நிலையில் இறைவனது வாக்குறுதி மீது முழுமையான நம்பிக்கையுடன் இருந்தார்கள். அவன் அவர்களை தனது ரஸூலாக்கி அனுப்பி இருந்தான். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் எத்தகைய உறுதியுடன் தம்மிடத்தில் இருந்தார்கள் என்றால் அவர்களை எதுவும் தம்மிடத்தில் இருந்து அசைக்க முடியவில்லை.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எவ்வாறிருப்பினும் இது இஸ்லாத்திற்கு மிகக் கடுமையான நெருக்கடியான நிலையாக இருந்தது. மக்காவாசிகள் மீதான நம்பிக்கையில் அவநம்பிக்கை ஏற்பட்டது. ஆனால் மதீனாவில் நம்பிக்கையின் ஒளிக்கதிர் வெளிப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் கவனத்துடன், மதீனாவும் கூட மக்கா மற்றும் தாயிப் போன்று மறுத்து விடுமா? அல்லது அதன் நற்பேறு வேறு விதமாக எழுதப்பட்டுள்ளதா? என்று அதனை எதிர்நோக்கி பார்த்துக் கொண்டிருந்தார்கள். இந்நிலையில் ஹஜ்ஜின் சந்தர்ப்பம் வந்தது. ஆர்வத்துடன் வீட்டை விட்டு வெளியேறினார்கள். உக்பாவுக்கு அருகில் நடந்தார்கள். அங்கு அவர்களுக்கு யஸ்ரிபின் சிறு சிறு கூட்டத்தின் பக்கம் பார்வை பட்டது. பார்த்ததும் உடனே அறிந்து கொண்டார்கள். அவர்கள் மிகவும் அன்புடனும், கலப்பற்ற தன்மையுடனும் முன் வந்து அன்னாரை சந்தித்தனர். இம்முறை 12 பேர் வந்திருந்தனர். சென்ற வருடம் ஐந்து நபர்கள் இருந்தனர். இம்முறை ஏழு புதிய நபர்கள் இணைந்திருந்தனர். அவர்கள் அவ்ஸ், ஹஸ்ரஜ் இரு கோத்திைச் சார்ந்தவர்கள் ஆவர். ஹஸ்ரத் உக்பா பின் ஆமிர் அவர்களும் இந்த பைஅத்தில் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களை விட்டு தனித்து மலைகளுக்கு நடுவிலுள்ள ஓரிடத்தில் அவர்களை சந்தித்தார்கள். அவர்கள் மதீனாவின் நிலைமைகளை எடுத்தக் கூறினார்கள். இம்முறை அனைவரும் அன்னாரது கையில் பைஅத் செய்தார்கள். மதீனாவில் இஸ்லாத்தை நிலைநாட்ட அடிக்கல் அதன் மூலம் நடப்பட்டது.

பைஅத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உண்மை மற்றும் உறுதியுடன் இந்த உடன்படிக்கையில் நிலைத்து நில்லுங்கள். இதனால் உங்களுக்கு ஜன்னத் கிடைக்கும். நீங்கள் பலவீனத்தை வெளிப்படுத்தினால் உங்கள் விவகாரம் இறைவனிடம் இருக்கிறது. அவன் எவ்வாறு விரும்புகிறானோ அவ்வாறு நடந்து கொள்வான். இந்த பைஅத் வரலாற்றில் முதலாவது பைஅத்தே உக்பா என்று அழைக்கப்படுகிறது. பைஅத் வாங்கப்பட்ட அவ்விடம் அக்பா என்று அழைக்கப்பட்டது. மக்காவுக்கும் மினாவுக்கும் இடையே இருக்கின்றது. உக்பா என்பதன் சொற்பொருள் உயர்ந்த மலைப்பாதை என்பதாகும். பிறகு மக்காவிலிருந்து திரும்பிச் செல்வதற்கு முன்பாக அந்த 12 முஸ்லிம்களும் ஏதாவதொரு இஸ்லாமிய முஅல்லிமை எங்களுடன் அனுப்புங்கள் என்றார்கள். அவர் வந்து எங்களுக்கு இஸ்லாத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். எங்கள் இணை வைக்கும் சகோதரர்களுக்கு இஸ்லாம் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும் என்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், முஸ்அப் பின் உமைர் என்ற அப்துத்தார் என்ற கோத்திரத்தைச் சார்ந்த கலப்பற்ற இளைஞரை அவர்களுடன் அனுப்பினார்கள்.

நபித்துவத்தின் 13–வது ஆண்டில் இரண்டாவது பைஅத்தே உக்பா நடைபெற்றது. அதில் 70 அன்ஸார்கள் பைஅத் செய்தனர். ஹஸ்ரத் உக்பா பின் ஆமிர் அவர்கள் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போரிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். உஹது நாளில் இவர் பச்சை நிற ஆடை அணிந்திருந்ததினால் அதன் மூலம் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டார். இவர் ஹஸ்ரத் அபுபக்கரின் கிலாஃபத் காலத்தில் யமாமா போரில் ஷஹீது ஆனார்.

உக்பா பின் ஆமிர் கூறுகிறார்: நான் எனது மகனை ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் எடுத்து வந்தேன். அப்போது அவனது 9 வயது சிறுவன் ஆவான். எனது தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணம்! எனது மகனக்கு துஆ கற்றுத் தாருங்கள். அதன் மூலமாக அவன் அல்லாஹ்விடம் துஆ செய்யட்டும் என்றார்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சிறுவனே! கூறு. அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக ஸிஹதன் ஃபீ ஈமானி. வஇமானன் ஃபி ஹுஸ்னி குலுகின், வஸலாஹன் யத்பவுன் நஜா. அதாவது அல்லாஹ்வே! நான் உன்னிடம் ஈமானுடன் கூடிய நல்ல உடல்நலத்தை கேட்கிறேன். ஈமானுடன் நல்லொழுக்கத்தை கேட்கிறேன். சமாதானத்துடன் கூடிய வெற்றியை விரும்புகிறேன். அல்லாஹ் இந்த சஹாபாக்களின் அந்தஸ்தை உயர்த்துவானாக.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: தற்போது நான் ஜுமுஆவுக்குப் பிறகு அமெரிக்காவைச் சார்ந்த ஓர் அஹ்மதியைப் பற்றி எடுத்துக் கூறுவேன். மேலும் அவர்கள் ஜனாஸாவையும் தொழ வைப்பேன். மர்ஹூம் அஹ்மது ஷரீஃப் சாஹிபின் மனைவியான ஸிஸ்டர் ஆலியா ஷஹீது சாஹிபா ஆவார்கள். 26 டிசம்பர் 2018 –ல் வஃபாத் ஆனார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். அல்லாஹ் இவருக்கு நீண்ட வயதை வழங்கி இருந்தான். இவரது வயது 105. அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக.

இவரைப் பற்றி எழுதியுள்ளார்: இவர் 1936 –ல் பைஅத் செய்யும் வாய்ப்பு பெற்றார். இவர் 1963 முதல் 1966 வரை அமெரிக்காவின் லஜ்னா தலைவியாக பணி செய்துள்ளார். மர்ஹூமாவுக்கு அமெரிக்கா லஜ்னா இமாயில்லாஹ்வின் 50 வருட காலத்தில், ஒரு நீண்ட காலம் பொதுச் செயலராகவும், சந்தா செயலராகவும், தஃலீம் செயலராகவும், கித்மத்தே கல்க் செயலராவும், உள்ளூர் சத்ர் லஜ்னாவாகவும் பணியாற்றும் நற்பாக்கியம் கிடைத்தது. ஜமாஅத்துடனும், கிலாஃபத்துடனும் எப்போதும் ஆழமான தொடர்பை வைத்திருந்தார்கள். எல்லா வகையான தியாகங்களுக்கும் எப்போதும் தயாராக இருந்தார்கள். மிகவும் பரிவுடன் நடந்து கொள்ளக்கூடிய மற்றும் அன்பு செலுத்தக்கூடிய பெண்மணியாவார்கள். அல்லாஹ் அவரது தகுதியை உயர்த்துவானாக. அவர்களிடம் மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்காக காணப்பட்ட அந்த ஆன்மாவையும், உணர்வையும் அவர்களது சந்ததியிலும் அல்லாஹ் ஏற்படுத்துவானாக.

**மொழியாக்கம்: முஅல்லிம் நிஸாமுத்தீன்**